ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2216/39 - 2021 පෙබරවාරි මස 27 වැනි සෙනසුරාදා - 2021.02.27

*2216/39 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி 21/ 1978* (x) *(அ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்ட* GL *24 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2019, ஏப்பிறல் 23 ஆந் திகதிய 2120/ 6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை அதன்* I *ஆம் நிரலில் காணப்படுகின்ற "உயிர் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி" என்னும் பதிவினையும் மற்றும் அதன்* II *ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காணப்படுகின்ற அதனது சுருக்கப் பெயரினையும் உடனடுத்து இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை* II *இல் முறையே நிரல்* I *இன் கீழும் மற்றும் நிரல்* II *இன்கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

### *அட்டவணை* I

*நிபந்தனைகள்*

*1. நிதியியல் கணிதக் கற்கை மற்றும் பிரயோகப் புள்ளிவிபரவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி (எஸ் எல் கியூ எப் மட்டம் 6) எனத் தலைப்பிடப்பட்ட கற்கைநெறிக்காக மாணவர் ஒருவரை சேர்த்துக்கொள்வதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை*

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறையில் ஒரே தடவையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும்.

2. கல்வியில் பட்டப்பின் திப்புளோமா - (எஸ் எல் கியூ எப் மட்டம் 8) எனத் தலைப்பிடப்பட்ட கற்கைநெறிக்காக மாணவர் ஒருவரை சேர்த்துக்கொள்வதற்கான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமை பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் :-

(i) ஒரு இளநிலைப் பட்டம் :

(அ) இயைபான பாட இடப்பரப்பில் 30 திறமைச் சித்திகளை உள்ளடக்குதல் ; அல்லது
(ஆ) இயைபான பாட இடப்பரப்பில் 30 திறமைச் சித்திகளுக்குச் சமமான வேலை பழகுவதற்கு முன்மாதிரியான அனுபவம் ; அல்லது

(ii) பந்தி (i) (அ) இற்கு அல்லது பந்தி (i) (ஆ) இற்குச் சமமான இயைபான பாட இடப்பரப்பிலான தகைமை ஒன்று ; அல்லது

(iii) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறான என்வீகியூ மட்டம் 7 இனைப் பூர்த்தி செய்தல்.

3. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீட்டுப் பெயர் |
|---|---|
| நிதியியல் கணிதக் கற்கை மற்றும் பிரயோகப் புள்ளிவிபரவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சீ கௌரவ (நிதியியல் கணிதக் கற்கை மற்றும் பிரயோகப் புள்ளிவிபரவியல்) |
| கல்வியியலில் பட்டப்பின் திப்புளோமா | பிஜி திப் (கல்வியியல்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2021, பெப்புருவரி 18.

03-326

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.